Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04

விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் தினசரி

நாதம்: 02 மார்ச் (17 - 03 - 1991) ஞாயிற்றுக்கிழமை ஓசை 27

## காபனீரொட்சைட்டின் அளவு வளிமண்டலத்தில் அதிகரிப்பு

(டோக்கியோ)

வளிமண்டலத்தில் உள்ள காபனீரொட்சைட்டின் அளவு 13 வீதத்தினால் அதிகரித்திருப்பதாக ஜப்பானிய வளிமண்டல ஆராய்ச்சி நிறுவனமொன்று கூறியுள்ளது. அதிகரித்துவரும் வெப்பநிலை அதிகரிப்பு ஏற்பட வளிமண்டலத்திலுள்ள காபனீரொட்சைட்டின் அளவு அதிகரிப்பு ஒரு முக்கிய காரணியாகும். வளிமண்டலத்தில 20 கிலோ (4ஆம் பக்கம் பார்க்க)

# மாணவர்களின் பதில் என்ன, இன்றைய எதிர்பார்ப்பு இதுவே!



## பல்கலைக்கழகத்தில் கோ. மகேந்திரராசா

சிறிலங்கா இனவாத அரசு எமது இனத்தின் மீது அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. இந் நிலையில் எமது தேசம் தனது விடுதலைக்காக மாணவர்களின் பங்களிப்பை வேண்டி நிற்கின்றது. இதற்கு மாணவர்களின் பதில் என்ன என்பதை இந்தத் தேசம் எதிர்பார்க்கின்றது.

இவ்வாறு நேற்றுமாலை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற மறுமலர்ச்சிக் கழகத்தின் பதினோராவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா கூறினார்.

மண்டபம் நிறைந்த மக்கள் மத்தியில் அவர் தொடர்ந்து பேசுகையில் இன்று எமதுதேசத்திற்கு சமூக மாற்றத்துடன் கூடிய விடுதலை தேவைப்படுகின்றது. இதனால் மாணவர்களினதும் தன்னுள் வாழும் ஒவ்வொருவரினதும் பங்களிப்பை எமது சமூகம் வேண்டி நிற்கின்றது.

மாணவர்கள் மாணவர்களாக நிற்க வேண்டும் என்ற (4ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம் 'அனல்'

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினருடனான மோதலில் கடந்த வியாழனன்று காயமடைந்த வீரவேங்கை அனல் நேற்று முன்தினம் வீரமரணமடைந்துள்ளார். இவருக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## சமூகத்தின் தேவைகளுக்கு பல்க. சேவையாற்ற வேண்டும்

### – துணைவேந்தர் துரைராஜா

(யாழ்ப்பாணம்)

"பல்கலைக்கழகத்தின் சகல துறை வளர்ச்சியிலும் பொது மக்களின் பங்களிப்பும் ஊக்குவிப்பும் எமக்கு இருந்து வருகின்றது. உலகின் பல பல்கலைக்கழகங்களை எடுத்து நோக்கும்போது அவற்றின் வளர்ச்சிக்கு அந்த நாட்டின் அரசுகள் அதிகளவு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கின்றன ஆனால் அங்கு பொதுமக்களின் பங்களிப்பு குறைவானது. எமக்கு மக்களின் மனப்பூர்வமான பங்களிப்பு இருக்கிறது".

இவ்வாறு நேற்று யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தின் பதினோராவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய பல்கலைக்கழக துணைவேந்தர் அ. துரைராஜா கூறினார்.

அவர் தொடர்ந்து உரைநிகழ்த்தும்போது சமூகத்தின் அரசியல், பொருளாதார, தொழில்நுட்ப மற்றும் விஞ்ஞானம் (4ஆம் பக்கம் பார்க்க)

## மறுமலர்ச்சிக் கழகத்தின் 11ஆவது ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தின் பதினோராவது ஆண்டு நிறைவு விழா நேற்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் கோலாகலமாக நடைபெற்றது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக பல்கலைக்கழக துணைவேந்தர் திரு அ. துரைராஜா சிறப்பு விருந்தினராக விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா (4ஆம் பக்கம் பார்க்க)

## தலைமை செயற்குழு உறுப்பினர் மேஜர் செங்கதிர் வீரமரணம்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவில் கடந்த மாதம் இருபத்தைந்தாம் திகதியன்று சிறிலங்கா இராணுவத்தினரின் எல்லைப் பகுதிக்குள் தவறுதலாகப் பிரவேசித்த விடுதலைப் புலிகள் தலைமைச் செயற்குழுவின் பிரசாரப் பொறுப்பாளர் மேஜர் செங்கதிர் (நெல்லியடி), சிந்து (ஆனைக்கோட்டை) ஆகிய இரு போராளிகளும் சிறிலங்கா இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டால் வீரமரணமடைந்துள்ளனர். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## கொழும்பில்

## தமிழ்க் குழுக்களுடன் இந்தியத் தூதுவர் பேச்சு

(டெல்லி)

இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்க்கப் பல்வேறு தமிழ்க் குழுக்களுக்கிடையே இந்திய உயர்ஸ்தானிகரால் கொழும்பில் ராஜதந்திர முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

நேற்று முன்தினம் இந்திய (4ஆம் பக்கம் பார்க்க)

## மிதி வெடியில் இருவர் காயம்


(வவுனியா)

வவுனியாவில் சிறிலங்கா இராணுவத்தினரின் மிதிவெடியில் சிக்கிய இரண்டு பொது மக்கள் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் ஒரு மணியளவில் வவுனியா தாண்டிக்குளம் காவலரணில் இருந்து கண்டி வீதியால் பொது மக்கள் சென்றபோது இராணுவத்தினர் புதைத்து வைத்த மிதிவெடிகள் வெடித்ததில் இளமருதங்குளத்தைச் சேர்ந்த பொன்னையா பொன்ராசா (40) வும், வேறு ஒருவரும் படுகாயமடைந்துள்ளனர். (மு)

## புலிகள் இராணுவம் மோதல்

வீமன்காமம் இராணுவ முகாமின் காவலரணில் இருந்து நேற்றுமுன்தினம் (4ஆம் பக்கம் பார்க்க)



## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னையின் மகிழ்வு

01. 04. 1971

பணியின் முடிப்பு

01. 02. 1991

### வீரவேங்கை லீலாவதி
(நல்லதம்பி மணிமொழி)

அணி அணியாகச் சென்றார்
அன்னையின் பூமி காக்க
மணி மொழி நீயும் சென்றாய்
மகளிரில அணியாய் நின்றாய்
பணிவொடும் பண்பிெனாடும்
பாசறைப் பயிற்சி கொண்டாய்
துணிவொடும் தூய்மையோடும்
தொடர்பணி துலங்கக் கண்டாய்
தனி வழி சென்றாய் ஏனோ
தாயகம் தவிக்க அம்மா

3 ஆம் வட்டாரம்
குறிகாட்டுவான் வீதி,
புங்குடுதீவு.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

(R 1181)

---


## வரிவிளம்பரம்

**கொழும்பு ஸ்ருடியோ**
புளொக் (Block) புகைப் படம், டார்கில், கலர்படப் ஒளி யச் பிறேக் போட்டோகல், கலர் பிலிம், கருவிகள், ஸ்லைட்ஸ் முதலியனவற்றிற்கு நாடுங் கள்: கொழும்பு ஸ்ருடியோ யாழ்ப்பாணம். (B - 2090)

**THE JAFFNA EDUCATION CENTRE**
The Jaffna Education Centre யாழ்ப்பாணக் கல்வி நிலையம் (சாந்தி சினிமா முன்பாக மேல் மாடியில்) O/L A/L IAB Spoken English. Shorthand Typing இரு மொழிகளிலும் நடை பெறுகின்றன. (-2107)


## இலங்கை வங்கி தரகுப்பணம் அறவிடுவதில்லை

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி கிளைகள் எதுவும் அரச மற்றும் தனியார் துறையினரிடம் இருந்து நிலைப்பணக் கொடுக்கல் வாங்கல்களுக்கு தரகுப் பணம் எதையும் அறவிடுவதில்லை. இவ்வாறு வங்கியின் மாவட்ட முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

எனினும் காசோலைகளுக்கு வழமையான வங்கி நடைமுறைப்படி தரகுப் பணம் அறவிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (க)

## அங்கத்தவராக வேண்டுகோள்

யாழ். மாநகர எல்லைக்குட்பட்ட சகல வர்த்தகர்களும் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள சுப்பிரமணியம் கட்டடத்தின் 2ஆம் மாடியிலுள்ள யாழ். வர்த்தக சங்கத்துடன் தொடர்பு கொண்டு 31 03 91 க்கு முன்னர் சங்க உறுப்பினர்களாக சேர்ந்துகொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளனர்.

---


## விற்பனைக்கு

பருத்தித்துறை வீதியிலுள்ள கட்டைப்பிராய் பகுதியில் 10 பரப்பு காணியும் நல்லூர் செல்லர் வீதியில் வீடு கட்டக்கூடிய 4 1/2 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு, லேத் மிசின்கள், தகடு வெட்டும் கட்டர் விற்பனைக்குண்டு.

தொடர்பு: பாஸ்கோ ஸ்தாபனம்
முத்திரைச்சந்தை,
நல்லூர்.

(B/2156)


## ஓராண்டு நினைவு



தோற்றம்:
27. 09. 54

மறைவு:
27. 03. 90

### சிவராமலிங்கம் சிவமோகன்
(ராஜாஜி)

தலைமகனாய் வந்தாய், நிலைமகனாய் நிற்கவேண்டிய நீ
எமைவிடுத்து அகன்றாய். ஆண்டொன்று போனது
மகனாய், கணவனாய், அப்பாவாய் அண்ணனாய் -எமது அகத்தில்
புகுந்து புதிய பிறவியாய் சிரிக்காய்.
மேசனமானவனே!
உன் ஆத்மா மறுபிறப்பு எடுக்கலாம்
சிவப்பேறு எய்தலாம் எங்கள் நினைவஞ்சலி; நாம்
இருக்கும் வரை நம்பில இருக்கும்
உங்களான்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

"தணிகை"
28 குமாரசுவாமி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
17- 3- 91

பெற்றோர், மனைவி. மக்கள். தம்பி
உற்றார், உறவினர், நண்பர்கள்

(B-2147)

---

## 51 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தாயின் மடியில்:
28-11-1967
(சண்டிலிப்பாய்)

தாயக மண் மீட்பில்:
26-01-1991
(மன்னார்)

### வீரவேங்கை மேஜர் கௌரி
(சதானந்தன் அனுதீபன்)

26 - 01 - 1991 அன்று வீரமரணமடைந்த எமது புத்திரனின் வீட்டுக் கிரியை 17-03-1991 ஞாயிற்றுக் கிழமை பகல் 12 00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இதில் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர் நண்பர்கள் யாவரையும் அன்புடன் வேண்டிக்கொள்கிறோம். மேலும் பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும், ஆறுதல் கூறியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

பாலைப்பெருமாள்கட்டு.
மன்னார்.

பெற்றோர்,
சகோதரர்கள், உறவினர்கள்.

(R. 1176)

## 6ஆம் மாத நினைவஞ்சலி

### வீரவேங்கை சின்னமணி
(ஏகாம்பரம் ஜெயந்தன் உரும்பராய் தெற்கு)

ஜனனம்.
10 - 05 - 1971

வீரமரணம்:
19 - 10 - 1990

'கட்டுவனில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில்)

என்றும் உனை மறவா
தாய்: ஏ. சின்னப்பிள்ளை,
சகோதரர்கள்: இ. நதி, ஏ. தவராஜா, செ. தேவி, ஏ. மனோகரன், ஏ. மோகனா, ஆ. மதிவதனா, ஏ. நிர்மலா ஏ. சுசீலா, ஏ. வரதன்

(R/1188)



## நினைவு கூருகின்றோம்

### மார்ச் 17

1987ஆம் ஆண்டு கவுடாப்பிட்டியில் வீரமரணமடைந்த 2ஆம்லெப்.ரவி (தேவராஜ் - அக்கரைப்பற்று - 07)

இதே ஆண்டு அட்டப்பள்ளத்தில் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட திடீர்த்தாக்குதலின் போது வீரமரணமடைந்த லெப் லவன் (செ. பாக்கியநாதன் - அட்டப்பள்ளம்)

இதே ஆண்டு வீரமரணமடைந்த
★ சொர்ணம் (மூத்தான் சிவசரணம் - மூப்பதேர்கர் - திருமலை)

இதே ஆண்டு நாவற்குழியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்த லெப் ஜீவா (தி. விஜயனந்தன் - குருநகர்)

1988ஆம் ஆண்டு மட்டக்களப்பு மணல்பிட்டியில் தேசவிரோத சக்திகளுடனான மோதலில் வீரமரணமடைந்த றிஸ்வான் (மாமாங்கம் தட்சணாமூர்த்தி - திருப்பழுகாமம், மட்டக்களப்பு)

1989ஆம் ஆண்டு அக்கரைப்பற்றில் வீரமரணமடைந்த திருமால் (வடிவேல் துரையன் - காரைதீவு-03 - அம்பாறை)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

தமிழர்களின் தாகம்
தமிழீழத் தாயகம்
அமிழ்தான இலட்சியம்
அடைந்திட வென்றே
தங்கத் தலைவனின்
தானையில் இணைந்தீர்!
வேங்கையர் படையில்
வீரம் விளைத்தீர்!!
எங்கள் நினைவினில்
என்றும் நீங்கள்
நீங்கா இடத்தில்
நின்றே ஒளிர்வீர்!'!

★ மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர் சொர்ணம் கிளாஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

- விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி

(B-2144)

---


## சாயி அக்குபங்சர் சிகிச்சை நிலையம்

வாதம், ஆஸ்மா, மூட்டுக்காய்ச்சல், நீண்டநாள் மனநோய்கள் மற்றும் மாற்றமுடியாது எனக் கணிக்கப்பட்ட நீண்டநாட்கள் கொண்ட எந்த வகையான நோய்களாக இருந்தாலும் 'வர்மானிய அலகு முறைச் சிகிச்சை' எனப்படும் தமிழ் அக்குபங்சர் சிகிச்சை மூலம் சிகிச்சையளிக்கப்படும்.

வைத்திய கலாநிதி VP சுந்தாராஜன்
(விசேட அக்குபங்சர் சிகிச்சை நிபுணர்)
இல:- 10, பருத்தித்துறை வீதி - யாழ்நகர்

குறிப்பு:- முழுக்க முழுக்க தமிழ் முறையிலும் அதி நவீனமுறையிலும் சிகிச்சை அளிக்கப்படும்

**❋ சிந்தனைக்கு ❋**

அரிக்கும் பிணிபோல், அதிகாரம்
தொட்டதை யெல்லாம் பாழ்படுத்தும்

— பேர்ஸி. பி. ஷெல்லி

ஈழநாதம்

61, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 17-03-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 023-2839 நிர்வாகபீடம்: 2208
உ.பெ.எண் 08

# ஆட்சியிலிருப்பவர்களால் அல்லலுறும் நீதித்துறை

இந்தியப் பிரஜைகள் ஒவ்வொருவருக்கும் உள்ள உரிமைகள் போன்று இந்தியாவில் உள்ள வெளிநாட்டுப் பிரஜைகளும் இருப்பதனால் சட்ட முறையைப் பின்பற்றாமல் எவரையும் கைது செய்யவோ, காவலில் வைக்கவோ கூடாது என இலங்கைத்தமிழர் மீதான ஆட்கொணர்வு மனு மீது சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இத்தீர்ப்பானது சென்னை உயர் நீதி மன்றம் 'சுதந்திரமாக' மேற்கொண்ட சட்டரீதியான தீர்ப்பாகும். அதாவது அரசியல் அழுத்தங்களுக்கு நீதி மன்றம் உள்ளாகாத வேளையில் எடுத்த முடிவாகும்.

ஜனநாயக நாடுகளின் சட்டங்களின்படி அந்த நாடுகளின் நீதித்துறை தனித்துவமான அதிகாரம் கொண்டவை. அதிலும் இந்தியா ஒரு 'சமஷ்டி அமைப்பு' உடைய நாடு. அங்கு நீதித்துறை ஒற்றையாட்சி அமைப்புள்ள நாடுகளின் நீதித்துறையைவிட அதிகாரம் கொண்டதோடு அரசாங்கங்களின் தலையீடுகள் இருக்கக் கூடாது என வரையறுத்துக் கொண்ட நாடு. இதற்கு மத்திய, மாநில அரசாங்கங்களுக்கிடையிலான பிணக்குகள் நீதித்துறை ஊடாகத்தீர்க்க வேண்டி இருப்பதே முக்கிய காரணியமாகும்.

ஆனால், இந்தியாவில் நடைமுறையில் அவ்வாறு இருப்பதில்லை. மத்திய அரசாங்கங்கள் தமது செல்வாக்கை நீதித்துறையில் பிரயோகித்து வந்தனால் அரசியல் அழுத்தங்களுக்கு உட்பட்டே நீதித்துறை இயங்கிவந்துள்ளது. இந்த அழுத்தங்கள் போபர்ஸ் பீரங்கி ஊழல் இருந்து பாபர் மசூதி - ராமஜென்ம பூமி விவகாரம் உட்பட தமிழ்நாட்டு கூட்டாட்சி கலைப்பு வரை காணப்படுகின்றது. இவ்வாறே இலங்கைத் தமிழர் விவகாரங்களிலும் பொருத்தப்பாடு உடையதாகவே உள்ளது. நீதித்துறை சட்டதிட்டங்களை மீறி ஆட்சியாளரின் கொள்கைகளுக்கேற்ப இலங்கைத்தமிழர் விவகாரங்கள் கையாளப்பட்டன. அவ்வவ் ஆட்சியாளரின் நடத்தைக்கேற்ப நீதித்துறையும் இழுத்துச் செல்லப்பட்டது.

இந்தியா ஐக்கிய நாடுகளின் சாசனத்தை ஏற்றுக் கொண்டுள்ள நாடு ஆகையினால் ஐக்கிய நாடுகளின் சாசனத்தில் உள்ள தனிமனித உரிமைகளையும், அகதிகளுக்கான சட்டங்களையும் இந்தியா ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் கடந்த காலத்தில் இந்தியா அவ்வாறு செயற்படவில்லை. இதனை இந்திய நீதித்துறையும் கண்டுகொள்ளவில்லை.

தமிழ் நாட்டிலுள்ள இலங்கைத்தமிழர் பலர் இந்திய மத்திய மாநில அரசாங்கங்களின் அரசியல் நடவடிக்கைகளுக்கேற்ப கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள். கைது செய்யப்பட்டதற்கான காரணங்கள் அவர்களின் கைதின் பின்பே தேடிக் கொள்ளப்பட்டன.

கால்களை இழந்தவர்கள், வெடிகுண்டுத் தாக்குதலில் ஈடுபட முயற்சித்தார்கள் எனக் கைதின் பின் குற்றம் சாட்டப்பட்டதும் உண்டு. அதற்கு நீதித்துறை அனுமதி அளித்ததும் உண்டு. இதுபோன்று கைது செய்யப்பட்டவர்கள் சட்டத்தின் படியாக கைது செய்யப்பட்டார்கள் என்பதை நிரூபிக்க கைது செய்யப்பட்டவர்கள் வைக்கப்பட்டிருந்த விளையாட்டு மைதானத்திற்கு நள்ளிரவில் நீதிபதி அழைத்து வரப்பட்டு கைதிற்கான அனுமதி பெறப்பட்ட சம்பவமும் உண்டு.

இவ்வாறான தொடர்ந்த நிலையில் அரசியல்வாதிகளின் அழுத்தத்திற்குட்பட்டு இந்திய நீதித்துறை செயற்பட்டு வருகின்றது எனலாம். இந்தியாவின் நீதித்துறையில் அரசியல்வாதிகளின் செல்வாக்கு எவ்வளவிற்கு உள்ளது என்பதற்கு இன்று ஆட்சிலுள்ள சந்திரசேகர் அரசாங்கம் நீதிபதிகளை நியமிக்க கூடாது என ஜனாதிபதியை மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கோரியிருப்பதில் இருந்தே புரிந்து கொள்ளலாம்.

இந்தியாவின் நீதித்துறை பெரும்பாலும் சுதந்திரமாகச் செயற்படுவதில்லை. வழக்குகளும், தீர்ப்பும், பிணைபோதலும், அரசியல்வாதிகளினாலேயே தீர்மானிக்கப்படுகின்றன. இதனை நீதித்துறை நியமனங்கள் மூலமும், இடமாற்றங்கள் மூலமும் அரசியல்வாதிகள் நிலைநிறுத்தி வருகிறார்கள்.

இந்நிலையில் ஆட்கொணர்வு மனு மீதான சென்னை உயர் நீதிமன்றத்தின் சுதந்திரமான செயற்பாடு மத்தியிலும், மாநிலத்திலும் அரசாங்கம் கலைக்கப்பட்டுள்ள நிலையில் மேற்கொள்ளப்பட்டமையானது பல்வேறு இலாப நோக்கங்களும், அதிகார ஆசையும் கொண்ட அரசியல்வாதிகள் மலிந்துள்ள இந்தியாவில் நீதித்துறை சுதந்திரமாகச் செயற்படும் என்பது அந்த அரசியல்வாதிகளின் செல்வாக்கு ஆட்சியில் கட்டுப்படுத்தப்படும் போதுதான் ஏற்படும் என்பது இதன்மூலம் நிரூபணமாகியுள்ளது.

# மே 30, தொண்டர் ஆசிரியர் கள நிலை நேர்முகப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு பகுதிகளில் தொண்டர் ஆசிரியர்களுக்கான கள நிலையிலான நேர்முகப் பரீட்சைகள் மே மாதம் 30 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

தற்போது அரச பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றுபவர்களை நிரந்தர நியமனம் செய்வது தொடர்பாக கல்விச் சேவைகள் ஆணைக்குழு மேற்கொண்ட தீர்மானத்திற்கு இணங்க இவ்வாறான கள நிலையான நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்படவுள்ளன.

இப் பரீட்சையின்போது சம்பந்தப்பட்ட ஆசிரியர்களது கல்வித் தகைமை மற்றும் சேவையாற்றிய காலம் என்பன பரிசீலிக்கப்படும்.

சேவைக் காலத்தைப்பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்து பாடசாலைக்கு சமூகமளிக்கத்தவறிய காலஎல்லைகள் குறித்து சில சலுகைகள் வழங்கப்படும். இந்த நேர்முகப் பரீட்சைகளை கல்வித் திணைக்கள மற்றும் கல்விச் சேவைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் நேரடியாக பாடசாலைகளுக்குச் சென்று நடாத்துவார்கள். (க)

## போலி ஆவணங்களுடன்

# ஆறு வடபகுதி இளைஞர் கட்டுநாயக்காவில் கைது

(கொழும்பு)

போலியான பயண ஆவணங்களைக் காட்டி நெதர்லாந்து செல்ல முயன்ற வடபகுதியைச் சேர்ந்த ஆறு தமிழ் இளைஞர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இரகசியப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். போலியான ஆவணங்களைத் தயாரிப்பதற்கு இந்த இளைஞர்கள் ரூபா 1,00 000 முதல் ரூபா 2,00 000 வரை முகவர் ஒருவருக்குக் கொடுத்துள்ளதாகப் பொலிஸ் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. மேல் விசாரணைக்காக இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வாரத்தில் இது இரண்டாவது சம்பவமாகும். இந்த இரு சம்பவங்களுக்கு முன்பும், போலியான ஆவணங்களுடன் பத்து வடபகுதி இளைஞர் கட்டுநாயக்காவில் பொலிசாரிடம் மாட்டிக்கொண்டனர்.

# புலமைப்பரிசில் பரீட்சை இம்மாதம் 30 ஆம் திகதி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் ஆண்டு ஐந்து மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை இம்மாதம் 30 ஆம் திகதி நடைபெறவுள்ளன.

இப்பரீட்சைக்காக 98 பரீட்சை நிலையங்களும் 24 இணைப்பு நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

வினாத்தாள்கள் உட்பட பரீட்சைக்குரிய அனைத்து ஆவணங்களும் தயாராக இருப்பதாகவும் கல்வித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (க)

## விசேட கூட்டம்

கல்வித் திணைக்கள வளவில் உள்ள நல்லூர் ஸ்தான சீ சீ தமிழ்க்கலவன் பாடசாலையில 19 03 91 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு ஒரு விசேட கூட்டம் நடைபெறும். புலமைப்பரிசில், க. பொ. த. பரீட்சைகள் உட்படப் பலமுக்கியமான கல்விச் செயற்பாடுகள் பற்றி ஆராயப்படவிருப்பதனால் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த சகல கொத்தணி அதிபர்களையும் கோட்டக் கல்வி அலுவலர்களையும் தவறாது சமூகமளிக்குமாறு கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் கேட்டிருக்கிறார்.

# இந்துமகளிரில் தமிழ்த்தின விழா

(யாழ்ப்பாணம்)

யாழ் இந்து மகளிர் கல்லூரி தமிழ்த்தின விழா எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 8 30 மணியளவில் மேற்படி கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ் பல்கலைக்கழக கல்வியியற் புலத்தலைவர் வ. ஆறுமுகம் பிரதம விருந்தினராகவும், பிரதம கல்வி அதிகாரி இ. வே. பரமேசுவரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள்.

பல்கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும் இவ் விழாவில் 'இன்னமும் இது ஆண்கள் உலகமே' என்ற தலைப்பில் பட்டிமன்றமும் இடம்பெறும். பட்டிமன்றத்துக்கு முரசொலி ஆசிரியர் சோ. பத்மநாதன் தலைமை வகிப்பார்.

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

கல்வி நிர்வாக சேவையின் தரம் 3 பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப்பரீட்சைக்குரிய அறிவித்தல் வெளியாகிய வர்த்தமானி இதுவரை வந்து சேரவில்லை ஆயினும் இதன் பிரதியை யாழ் கல்வித்திணைக்களத்தில் பார்வையிடலாம் என்றும் இப்பரீட்சைக்கு விண்ணப்ப முடிவுத்திகதியை நீடிப்பதற்குக் கோரப்பட்டிருப்பதாகவும் கல்விப்பணிப்பாளர் தெரிவித்தார். (க)

# 16 வருடதண்டனையின் பின் நிரபராதி என விடுதலை

(லண்டன்)

பிரிட்டனில் ஆயுள்தண்டனைபெற்று பதினாறு ஆண்டுகாலம் சிறையில் வைக்கப்பட்டிருந்த ஆறுபேரை விடுதலை செய்யும் லண்டன் நீதிமன்றத்தின் பரபரப்பான தீர்ப்பு நேற்று முன்தினம் வெளியாகியது.

1974 ஆம் ஆண்டில் பிரிட்டனின் நகரொன்றில் 21 பேரைப் பலிகொண்ட குண்டு வெடிப்பில் சம்பந்தப்பட்டவர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட ஆறுபேர் விசாரணை முடிவில் குற்றவாளிகள் எனக் கருதி ஆயுள் தண்டனைவிதிக்கப்பட்டனர். பதினாறு ஆண்டுகால சிறை வாசத்தின்போது அவர்கள் மேற்கொண்ட மேன்முறையீட்டு விசாரணையில் இந்த ஆறுபேரும் நிரபராதிகள் எனத்தீர்ப்பு வழங்கியுள்ளது நீதிமன்றம். இதனைத் தொடர்ந்து இவர்கள் விடுதலை செய்யப்பட இருப்பதுடன் இந்த ஆறுபேரும் தண்டனை அனுபவிக்க காரணமாயிருந்தோர் எனக் கருதப்படும் பதினாறு பொலிசார் விசாரிக்கப்பட வேண்டும் என்றும் நீதிமன்றம் கூறியுள்ளது.

## பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

பெண்கள் கைக்கடிகாரம் ஒன்று வீதியில் கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி வங்கிய சேவைகள் குழு தலைவரிடம் உள்ளது. பொருளின் உரித்தாளர்கள் தகுந்த ஆதாரம் காட்டி மீட்டுக் கொள்ளலாம் ஒருமாதத்திற்குள் மீட்கத் தவறின் விற்பனை செய்யப்பட்டு பணம் புனர்வாழ்வுப் பொறுப்பாளரிடம் ஒப்படைக்கப்படும்.

## சோவியத்தில் இருக்கும் எரிக் பொனிக்கரை

# உடன் தாயகம் அனுப்ப ஜேர்மனி கோரிக்கை

(பேர்லின்)

கிழக்கு ஜேர்மனியின் முன்னாள் கம்யூனிஸ தலைவர் எரிக் பொனிக்கரை உடனடியாக தாயகம் அனுப்பிவைக்குமாறு சோவியத் யூனியனை ஜேர்மனிய அரசாங்கம் கேட்டுள்ளது.

கிழக்கு ஜேர்மனிய மக்கள் பேர்லின் சுவரை கடந்து செல்ல முற்பட்ட போது ஏற்பட்ட உயிர் இழப்புகள் தொடர்பாக அவர் மீது கொலைக்குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

நீதி விசாரணை நடத்துவதற்காக அவரை ஜேர்மனிக்கு திருப்பி அனுப்புமாறு சோவியத் யூனியனை அந்த அரசாங்கம் கேட்டுள்ளது. முன்னதாக ஜேர்மனிய அரசாங்கம் மூன்று முறை சோவியத்யூனியனுக்கு இந்த வேண்டுகோளை விடுத்தும் அதனை சோவியத்யூனியன் புறக்கணித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

(கோப்பாய்)

கோப்பாய் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று ஞாயிற்றுக்கிழமை கோப்பாய் சிறிஸ்தவக் கல்லூரியில் காலை 9 00 மணிக்கு இடம் பெறும். திரு. ஐ. சிவராசா தலைமையில் நடைபெறும் இந்த வைபவத்திற்கு சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் வட பிராந்திய ஆணையாளர் சுகந்தன் இன்னாசித்தம்பி பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார்.

# யுத்த நிறுத்தத்தை மீறி ஈராக்கினுள் அமெரிக்கத் துருப்புக்கள் பிரவேசம்

(பாக்தாத்)

அமெரிக்கத் துருப்புக்கள் யுத்தநிறுத்தத்தைமீறி தெற்கு ஈராக்கிற்குள் நுழைந்துவிட்டதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அமெரிக்கத்துருப்புக்கள் யுத்த நிறுத்த எல்லையைமீறி ஈராக்கிற்குள் நுழைந்திருப்பதை ஓர் போர் நடவடிக்கையாகக் கருதக்கூடாது என்று அமெரிக்கப் படைகளுக்கான தளபதிஜெனரல் கொரீஸ் பவல்ஸ் தெரிவித்துள்ளார். ஈராக்கிற்குள் அமெரிக்கப் படைகளின் நடமாட்டம் சதாம் ஹுசைனின் ஆதரவுப் படைகள் மீது நெருக்குதலை ஏற்படுத்தும் நடவடிக்கை என வாஷிங்டனில் இராணுவ ஆய்வாளர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை வடக்கு ஈராக்கில் துருக்கி எல்லையருகே பல இடங்களைக் குருடிஸ் கெரில்லாக்கள் கைப்பற்றி உள்ளதாக அமெரிக்க இராஜாங்க இலாகா அறிவித்துள்ளது. ஈராக்கின் வட பகுதியிலும், தெற்கிலும் சதாம் ஹுசைனின் ஆதரவுப் படைகளுக்கும், சதாமின் எதிரணியினருக்கும் இடையில் கடும் சண்டைகள் இடம்பெறுவதாக மேற்கத்தைய செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

சதாம் ஹுசைனின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு அமெரிக்கா தெரிவித்த கருத்துக்கு மாறான நிலைப்பாட்டை ரஷ்யாவும் பிரான்ஸும் வெளியிட்டதைத்தொடர்ந்து அமெரிக்க நிர்வாகம் ஈராக்கிற்குத் தனது படைகளின் நடமாட்டத்தை மூடிக்கிவிட்டுள்ளது.

## இரசாயன ஆயுத ஆற்றல் பாகிஸ்தானிடம் உள்ளது

### அமெரிக்க உளவறிக்கை தகவல்

(டெல்கி)

இரசாயன ஆயுதத் தாக்குதல் ஆற்றல் பாகிஸ்தானிடம் இருப்பதாக அமெரிக்கா கூறியிருக்கிறது. அமெரிக்காவின் இராணுவ உதவியினால் பயனடைந்து வரும் நான்கு நாடுகளில் பாகிஸ்தானும் இருப்பதாக அமெரிக்க கடற்படை உளவு விசாரணை அலுவலகத்தின் ஆண்டறிக்கை ஒன்று கூறுகின்றது.

சவூதி அரேபியா, இந்தோனேசியா, தென் ஆபிரிக்கா, தாய்லாந்து உட்பட வேறு சில நாடுகளிலும் இத்தகைய திறமை இருக்கலாம் என்றும் இரசாயன ஆயுதத் தாக்குதல் வலிமை கொண்டுள்ள நாடுகளின் பட்டியலில் பாகிஸ்தானும் உள்ளதாக அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

வாஷிங்டனின் வழிகாட்டுதலுக்கு ஏற்ப பாகிஸ்தான் தன் அணுசக்தித் திட்டத்தைச் செயற்படுத்தாது விட்டால், பாகிஸ்தானுக்கான இராணுவ பொருளாதார உதவி மீதான தடையை அமெரிக்கா நீக்காது என்று அமெரிக்க நிர்வாகம் திட்டவட்டமாகக் கூறிவிட்டதாக இஸ்லாமாபாத்துக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

வாஷிங்டனின் வழிகாட்டுதல்படி பாகிஸ்தான் செயற்படாவிட்டால், பாகிஸ்தானுக்கு ஒதுக்கப்பட்ட நிதி மற்ற நாடுகளுக்கு வழங்கப்படும் என புஷ் நிர்வாகத்தை மேற்கோள் காட்டி ஓர் அதிகாரி தெரிவித்தார்.

## இந்திய தேர்தல் கடமையில் இருபதுஇலட்சம் ஊழியர்கள்

(டில்லி)

இந்திய மக்களவைத் தேர்தலில் வாக்குப்பதிவையும், வாக்கு எண்ணிக்கையையும் கவனிக்கச் சுமார் 20 இலட்சம் ஊழியர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள். 5 இலட்சத்துக்கு மேலான வாக்குச் சாவடிகளையும் தேர்தல் கமிஷன் அமைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் குறைந்தது நான்கு ஊழியர்கள் தேர்தல் கடமைகளில் பணிபுரிவார்கள். சுமார் ரூபா 200 கோடி தேர்தலுக்காக அரசாங்கம் செலவிட உத்தேசித்துள்ளது. அதாவது ஒவ்வொரு வாக்காளருக்கும் ரூபா 4க்குச் சற்றுக் குறைவாகச் செலவு செய்ய நேரிடும்.

#### புலிகள்

இரவு எட்டு மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினர் வெளியேற முயன்றபோது அவர்கள் மீது விடுதலைப்புலிகள் ''அருளா 89'' தாக்குதலை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலைத் தொடர்ந்து இராணுவத்தினர் பின்வாங்கிச் சென்றனர். சேத விபரம் தெரியவில்லை. (மு)

#### தமிழ்க்

உயர்ஸ்தானிகர் ஜா தமிழ்க் குழுக்களின் பிரதிநிதிகளுடன் கொழும்பில் ஆலோசனை கலந்தார். இனப்பிரச்சினைக்கு நிலையான தீர்வொன்றைக் காண்பதற்கான முதற்கட்ட நடவடிக்கை இதுவென்றும், தமிழ்க்குழுக்களின் கருத்துக்கள் முஸ்லிம் கட்சிகளின் ஆலோசனைகளுக்குச் சமர்ப்பிக்கப்படும் என்றும் ஸ்தானிகராலயவட்டாரபபேச்சாளரை மேற்கோள்காட்டி இந்திய வானொலி அறிவித்தது. பேச்சுவார்த்தைகள் 45 நிமிடங்கள் இடம்பெற்றன.

முஸ்லிம் கட்சிகளும் தமிழ்க்குழுக்களும் தெரிவிக்கும் கருத்துக்கள் அனைத்துக் கட்சிகள் மாநாட்டில் ஆலோசனைக்காகச் சமர்ப்பிக்கப்படும் என்றும் இந்திய வானொலி மேலும் தெரிவித்தது.

இந்தப் பேச்சுவார்த்தைகள் நேற்றும் தொடர்ந்து நடைபெற்றன.

#### மறுமலர்ச்சி

ஆகியோர் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர். மேலும் இவ்விழாவில் விடுதலைப் புலிகள மக்கள் முன்னணியின் பிரமுகர் திரு. வே. பாலகுமார் மற்றும் பேராசிரியர் சிற்றம்பலம், பேராசிரியர் நித்தியானந்தன், பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை திரு. மு. திருநாவுக்கரசு ஆகியோரும் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினர்.

பல்கலைக்கழகத்தின் அனைத்து பீடங்களினதும் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பலரும் இவ்விழாவில் கலந்து கொண்டனர். விழாவின் இறுதியில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (க)

#### சமூகத்தின்

போன்ற துறைசார்ந்ததேவைகளை நிறைவு செய்வதோடு இத்துறைகளின் வளர்ச்சிக்காகவும் சேவையாற்ற வேண்டும் என்பதையே நாம் விரும்புகின்றோம். இந்த இலக்கை அடைவதற்காகவே எமது பல்கலைக் கழகம் முயற்சி செய்து வருகின்றது என்றார்.

மேலும் இப்பல்கலைக்கழகத்தின் மறுமலர்ச்சிக் கழகமானது எமது சகல துறையிலான செயற்பாடுகளுக்கும் தனது ஒத்துழைப்பை வழங்கி வந்திருக்கின்றது என்றும் கூறினார். (க)

#### கொர்பசேவ் - பேகர் சந்திப்பில்

## ஆயுதக் கட்டுப்பாட்டில் உடன்பாடு ஏற்படவில்லை

(மாஸ்கோ)

பால்டிக் குடியரசுகள் மத்தியில் நெருக்கடியைத் தணிக்கவும், சோவியத் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் சோவியத் ஜனாதிபதி மிகெயில் கொர்பசேவ் எடுக்கும் நடவடிக்கைகளை அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஜேம்ஸ் பேகர் பாராட்டினார். இருந்த போதிலும், ஆயுதக் கட்டுப்பாட்டு விவகாரத்திலும், மத்திய கிழக்குப் பிரச்சினையில் பாலஸ்தீன விடுதலை இயக்கம் விலக்கி வைக்கப்பட வேண்டுமென்ற அமெரிக்க நிலைப்பாட்டிலும் இரு அரசுகளுக்குமிடையே இணக்கம் ஏற்படவில்லை.

## மாணவர் உணவு முத்திரைக்கு சத்துணவு வரவில்லையாம்

(யாழ்ப்பாணம்)

மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் மதிய உணவு முத்திரைகளுக்கு சத்துணவுப் பொருள்கள்வந்துசேரவில்லை என்று யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கைவிரிக்கின்றனவாம்.

யாழ். மாவட்ட மாணவர்களுக்கு ஜனவரிமாத முத்திரைகள் கடந்த (15.3 91) வெள்ளியன்று காலம்தாழ்த்தி வழங்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (21)

## தி.மு.க - ஜனதாதள பேச்சு திருப்தியாகவுள்ளதாம்

(சென்னை)

மக்களவை மற்றும் தமிழகத் தேர்தலில் தொகுதி உடன்பாடு காணத் திராவிட முன்னேற்றக் கழகத்துடன் நடாத்திய பூர்வாங்கப் பேச்சுக்கள் திருப்தியளிப்பதாகவுள்ளன என்று தமிழ்நாடு ஜனதா தளம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் சென்னையில் கூறியுள்ளார்கள் தொகுதி உடன்பாட்டுப் பேச்சுக்கள் மேலும் தொடருமென அக்கட்சிகள் தெரிவித்துள்ளன.

#### இணைந்திருப்பது தொடர வேண்டும்?

## இன்று சோவியத் யூனியனில் கருத்துக் கணிப்பு

(மாஸ்கோ)

சோவியத் யூனியன் தொடர்ந்தும் ஒரே ஆட்சி நிர்வாகத்தின் கீழ் இருக்க வேண்டுமா? இல்லையா? என்பதைத் தீர்மானிக்கும் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு இன்று நடைபெறவுள்ளது சோவியத் யூனியனின் 15 குடியரசுகளுக்கும் என அறிவிக்கப்பட்ட இவ் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளப் போவதில்லையென ஐந்து குடியரசுகள் ஏற்கெனவே அறிவித்துள்ளன. சோவியத் யூனியன் என்ற வகையில் ஒரே அமைப்பு தொடர்ந்தும் இருக்க வேண்டுமென 60 சதவிகிதமான மக்கள் விரும்புவதாக அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. சோவியத் யூனியன் வரலாற்றில் முதன் முதலாக நடைபெறும் பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு இது என்பது குறிப்பிடத்தக்கது.

## விபத்தினால் பெண்மரணம்

(சுதுமலை)

கோரதீவில் கடந்த 11ஆம் திகதி மினிபஸ் விபத்துக்குள்ளான முள்ளியவளையைச் சேர்ந்த பொன்னுத்தங்கம் சந்தையா (58 வயது என்பவர் சாவகச்சேரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார். மயக்கமடைந்த நிலையில் இருந்த இவர் யாழ் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டு நேற்றுக்காலை (16ஆம் திகதி) மரணமானார்.

## படுகாயம்

கட்டுத்துவக்கொன்று தவறுதலாக வெடித்ததில் பூநகரியைச் சேர்ந்த எஸ். மோகன்ராஜா (வயது 26) என்பவர் படுகாயமுற்ற நிலையில் நேற்று யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (மு)

## 'தேம்பாவணி' காப்பிய விழா

(யாழ்ப்பாணம்)

இத்தாலிநாட்டுத் தமிழறிஞரான வீரமாமுனிவரின் 'தேமபாவணி' காப்பியவிழா இன்று (17-3-91) ஞாயிறு பிற்பகல் 3மணிக்கு யாழ் பிரதானவீதி, மறைக்கல்வி மண்டபத்தில் நடைபெறும். (21)

#### இம்முறை மக்களவைத் தேர்தலில்

## வகுப்புஉணர்வைவிட வறுமை முதன்மைபெறும்

### – சந்திரசேகர்

(டில்லி)

வரும் மக்கள் அவைத் தேர்தலில் சாதி, மத, வகுப்பு, உணர்வுப்பிரச்சினைகளைவிட நிர்வாகக் கேடுகள், வறுமை, சமுதாயக் கேடுகள் போன்ற சமூக பொருளாதாரப் பிரச்சினைகள் மக்களின் கவனத்தைக் கவருமென்று பிரதம மந்திரி சந்திரசேகர் யு என் ஐ செய்தி நிறுவனத்திற்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

1989 ஆம் ஆண்டுத் தேர்தலில் அரசியல் கட்சிகள் ராமஜென்மபூமி போன்ற பிரச்சினைகளை எழுப்பியதுபோல இந்தத் தேர்தலில் எழுப்பமுடியாது என்றும் கருதுவதாக அவர் கூறினார். தேர்தல் பிரசாரங்களின் போது பாபர் மசூதி விவகாரம் மண்டல் கமிஷன் பிரச்சினைகள் எழுப்பப்படும் என்றாலும் அந்தப்பிரச்சினைகள் தேர்தல் முடிவுகளைப் பாதிக்காது என்று தாம் கருதுவதாகவும் சந்திரசேகர் கூறினார்.

#### காஸனிரொட்சைட்டின்

மீற்றருக்கும், 35 கிலோமீற்றருக்கும் இடையிலான உயரத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றின்படி கடந்த ஐந்து வருடத்தில் காபனீரொக்சைட்டின் அதிகரிப்பு ஏற்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது.

#### மாணவர்களின்

தப்பான கருத்து எம்மத்தியில் நிலவுகிறது. இக்கருத்தை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது.

மாணவர்கள் சமூகத்தின் முக்கியமான அங்கத்தவர்கள். சிங்கள இனவாத அரசு எமது இனத்தின் மீது அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளது. இந்த நிலையில் எமது தேசம் தனது விடுதலைக்காக மாணவர்களின் பங்களிப்பை வேண்டி நிற்கின்றது. இதற்கு மாணவர்களின் பதில் என்ன என்பதை இந்தத்தேசம் எதிர்பார்க்கின்றது.

மாணவர்கள் நடுநிலைமையைப் பேணுவது என்பது சிங்கள இனவாதத்தின் முன் கேள்விக் குறியாகிவிட்டது. இந்த நிலையில் அடக்கப்படும் இனத்திற்குச் சார்பாகப் போராடுவது என்றகடப்பாடு எல்லோருக்கும் எழுந்து நிற்கின்றது.

சமூகத்தையும், சமூகத்தின் முன்னேற்றத்தையும் விமர்சிப்பதுடன் மட்டும் அறிவியலின் வேலை முடிந்துவிடவில்லை. சமூகத்தையும் அதன் அங்கத்தவர்கள் அனைவரையும் புரட்சிகர சக்தியாக மாற்றி அமைப்பதிலேதான் அறிவியலின் மகத்துவமே தங்கியிருக்கிறது.

அடக்கப்பட்ட தேசம் சமூகத்திடம் இருந்து எதை எதிர்பார்க்கின்றதோ அவற்றை நாம் உணர்ந்து கொண்டு தேசத்தின் விடிவுக்காகச் செயற்படவேண்டும் என்றார்.

யாழ். பல்கலைக்கழகத்தைப் பற்றிக் குறிப்பிடும் போது ஓர் காலத்தில் இந்தப் பல்கலைக்கழகம் எமது இனத்தின்மீதான அடக்குமுறைக்கு எதிராக போர்க்குணம் கொண்டு தீவிரமாக போராடியது. அதே போன்றதொரு நிலை மீண்டும் இங்கு வருவதையே நான் விரும்புகின்றேன் என்றார்.

யாழ் பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தைப் பற்றி அவர் குறிப்பிடும் போது இக்கழகத்தின் ஆரம்பகால நாட்கள் எனக்கு நன்கு பரிச்சயமானவை. அக்காலத்தில் இக்கழகம் தனது செயற்பாடுகளுக்காகவும் வாழ்ந்து முன்னேறுவதற்காகவும் கடுமையாகப் போராடவேண்டி இருந்தது. மாணவர்களுக்காகவும் சமூகத்தின் முன்னேற்றத்திற்காகவும் செயற்பட்டவிழந்த இச்சமூகம் இவ்வடக்குமுறைக்கு எதிராகவும் போராடவேண்டி இருந்தது. இப்போராட்டத்தில் இக்கழகம் தனது உறுப்பினர்களது இன்னுயிர்களையும் தியாகம் செய்யவேண்டியிருந்தது என்றும் குறிப்பிட்டார். (க)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.